**ஜூன் – 28**

# TNPSC துளிகள்

- கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து அதிக எண்ணிக்கையிலான நபர்கள் உயிரிழந்த சோகம் குறித்து விசாரிப்பதற்காக தேசிய மகளிர் ஆணையம் ஆனது, தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு சுந்தர் தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவினை அமைத்துள்ளது.
- தமிழ்நாடு மாநில வனத் துறையானது தமிழ்நாட்டில் தற்போதுள்ள 40 மலையேற்ற வழிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளில் மலையேற்றங்களை மேற் கொள்ளச் செய்வதற்கான முன்பதிவு செய்வதற்காக ஒரு இணையதளத்தை விரைவில் தொடங்க உள்ளது.
- உதகமண்டலத்தில் சராசரி கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,240 மீட்டர் உயரத்தில் தென்னிந்தியாவின் ஒரே உயர்மட்ட விளையாட்டுப் பயிற்சி மையம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் தேதியானது, 'தமிழ் மொழி தியாகிகள் நாள்' (தமிழ் மொழி தியாகிகள் தினம்) ஆக அனுசரிக்கப்பட உள்ளது.
- முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளான ஜூன் 03 ஆம் தேதியானது 'செம்மொழி நாள் விழா' ஆக கொண்டாடப்பட உள்ளது.
- கேரள மாநிலத்தின் பெயரை அதிகாரப்பூர்வமாக 'கேரளம்' என மாற்றுவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி கேரள சட்டசபை ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
- லெப்டினன்ட் ஜெனரல் N.S. ராஜா சுப்ரமணி, இராணுவத்தின் அடுத்த துணைத் தளபதியாக பதவியேற்க உள்ளார்.
- குளிர்பதனம், வளிப்பதனம் மற்றும் வெப்ப விசையியக்கி தொழில் துறைகள் பற்றிய பொது மக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 26 ஆம் தேதியன்று உலக குளிர்பதனத் தினம் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் SC/ST பெண்களுக்கான புதிய திட்டங்கள்

- விவசாயக் கூலிகளாகப் பணிபுரியும் நிலமற்ற பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப் பட்ட பழங்குடியினப் பெண்கள் நிலம் வாங்க உதவும் வகையில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று தமிழக அரசு சட்டப்பேரவையில் அறிவித்துள்ளது.
- தகுதியுள்ள ஒவ்வொரு மனுதாரரும் அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் அல்லது நில மதிப்பில் 50% மானியம் பெற இயலும்.
- தற்போது சொந்த வீடுகள் இல்லாத பழங்குடியினச் சமூகத்தினருக்காக 4,500 வீடுகள் கட்டமைக்க 70 கோடி ரூபாய் வழங்கப்படும்.
- பழங்குடியினர் குடியிருப்புகளை அணுகும் வகையில் 50 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்படும்.
- சிவகங்கை, ஈரோடு, விருதுநகர், கடலூர் மாவட்டங்களில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக சுமார் 15 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டப்படும்.
- திருச்சி, மதுரை மற்றும் கோவையில் 'அமுத சுரபி' திட்டத்தின் கீழ் 9 கோடி ரூபாய் செலவில் மையப்படுத்தப்பட்ட சமையலறை அமைக்கப்படும்.

- பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினச் சமூகங்களின் கலாச்சாரம், மரபுகள், இலக்கியப் படைப்புகள், மொழியியல் அடிப்படையிலான தேசபக்தி ஆகியவற்றைக் கொண்டாடுவதற்காக அரசாங்கம் 'வாழ்க்கை விழா' ஒன்றை ஏற்பாடு செய்ய உள்ளது.
- உயர்கல்வியில் சிறந்து விளங்கும் பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்டப் பழங்குடியின மாணவர்களுக்கு 'திறன் சார் படிப்புகளைத் தேர்வு செய்வதற்கான பற்றுச் சீட்டுகள்' வழங்கப்படும்.




## நிரந்தர பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள்




- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 36 கோடி ரூபாய் செலவில் மூன்று நிரந்தரப் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்களை தமிழ்நாடு மாநில அரசு அமைக்க உள்ளது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் 17.50 கோடி ரூபாய் செலவில் இரண்டு பல்நோக்கு நிவாரண மையங்கள் கட்டமைக்கப்படும்.
- திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள், கடல் சீற்றம், அணைகளில் இருந்து நீர் வெளியேற்றம் போன்ற சில இயற்கைப் பேரிடர்கள் குறித்து மக்களை எச்சரிக்கும் வகையில் 1,000 மையங்களையும் அரசு நிறுவ உள்ளது.

## காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல்



- வனப்பகுதிகளுக்கு அருகில் உள்ள விவசாய நிலங்களை மிக மோசமாக சேதப்படுத்தி விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தும் காட்டுப்பன்றிகளைக் கொல்ல அனுமதிப்பதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- இதன்படி காப்புக்காடுகளை ஒட்டிய பகுதிகள் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்படும்
    - மண்டலம் A (வன எல்லையிலிருந்து ஒரு கிலோமீட்டர் வரம்பிற்குள்);
    - மண்டலம் B (ஒன்று முதல் ஐந்து கிலோமீட்டர் வரம்பு வரை); மற்றும்
    - மண்டலம் C (ஐந்து கிலோமீட்டர் வரம்பிற்கு அப்பால்).
- காப்புக் காட்டிலிருந்து ஐந்து கிலோமீட்டர் வரம்பிற்குள் காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

# தேசியச் செய்திகள்

## "ஒரு வாரம் ஒரு கருத்துரு" (OWOT) பிரச்சாரம்

| S.No. | Thematic Areas | Organizing Week |
|---|---|---|
| 1 | Energy and Energy Devices | 24 – 28 June 2024 |
| 2 | Chemicals (including Leather) and Petrochemicals | 15 - 20 July 2024 |
| 3 | Aerospace, Electronics, and Instrumentation & Strategic Sectors | 2 - 30 August 2024 |
| 4 | Civil Infrastructure and Engineering | 2 - 6 September 2024 |
| 5 | Agri, Nutrition & Biotech | 21 - 26 October 2024 |
| 6 | Healthcare | 11 - 15 Nov 2024 |
| 7 | Mining, Minerals, Metals and Materials | 25 - 30 November 2024 |
| 8 | Ecology, Environment, Earth & Ocean Sciences and Water | 10- 17 December 2024 |

- மத்திய அரசானது, "ஒரு வாரம் ஒரு கருத்துரு" (OWOT) என்ற பிரச்சாரத்தினைத்

தொடங்கியுள்ளது.

- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளில் இந்தியாவின் சமீபத்தியச் சாதனைகளை எடுத்துக் காட்டுகிறது.

## மின்சார வாகனங்களுக்கான BIS தரநிலைகள்




- இந்திய தரநிலைகள் வாரியம் ஆனது (BIS) IS 18590: 2024 மற்றும் IS 18606: 2024 எனப்படும் இரண்டு புதிய தரநிலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தரநிலைகள் பல்வேறு வகைகளில் மின்சார வாகனங்களின் ஆற்றல் தொடர் அமைப்புகள் மற்றும் மின் கலங்கள் தொடர்பான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் தரநிலைகள் ஆனது, மின்சார வாகனங்களின் முக்கியமான கூறுகள், குறிப்பாக ஆற்றல் தொடர் அமைப்புகள், மிகவும் கடுமையான பாதுகாப்புத் தேவைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்கா – 'நுண்பள்ளிகள்' தோற்றம்

- அமெரிக்காவில் 7 மாணவர்களுடன் கூடிய 'நுண்பள்ளிகள்' உருவாக்கி வருகின்றன.
- நுண்பள்ளிகள் என்பது சராசரியாக 16 குழந்தைகளைக் கொண்டு முழு நேர, பகுதி நேர அல்லது கலப்பு நேர அடிப்படையிலான கல்விச் சேவையினை வழங்கும் மிகவும் சிறிய தனியார் கல்வி நிறுவனங்களாகும்.
- இந்தப் பள்ளிகள் முழு நேர ஆசிரியர்களுடன், பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டு, சில சமயங்களில் தரப்படுத்தப்பட்ட தேர்வுகளுடன் பெரும்பாலும் வாரத்திற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் திறந்திருக்கும்.

- தேசிய நுண் பள்ளிக் கல்வி மையம், நாடு முழுவதும் 1 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களுக்கு கல்வி சேவை வழங்கி வரும் 95,000 நுண்பள்ளிகள் மற்றும் வீட்டுப் பள்ளிக் கூடங்கள் உள்ளன என்று மதிப்பிட்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### புதிய தாவர இனங்கள் – அந்தமான் மற்றும் அருணாச்சல்

- இந்தியத் தாவரவியலாளர்கள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய இரண்டு உயிரி-புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலிருந்து இரண்டு புதிய தாவர இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- நிலமேல் தண்டு-ஒட்டுண்ணி பூக்கும் வகை தாவர இனங்கள் ஆன டென்ட்ரோப்தோ லாங்கென்சிஸ் மத்திய அந்தமானின் லாங் தீவுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.
- மற்றொரு இனமானது அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் கண்டறியப்பட்ட பெட்ரோகோஸ்மியா அருணாசலன்ஸ் என்ற புதிய மூலிகை தாவர இனமாகும்.




### உலகின் முதல் ஆசிய ராஜ கழுகுகள் வளங்காப்பு மையம்

- உத்தரப் பிரதேசத்தில் ஆசிய ராஜ கழுகுக்கான உலகின் முதல் வளங்காப்பு மற்றும் இனப்பெருக்க மையம் ஆனது விரைவில் மகாராஜ்கஞ்ச் எனுமிடத்தில் அமைக்கப்பட

உள்ளது.

- ❖ இதுவே செந்தலை கழுகு என்றும் அழைக்கப்படும் ஆசிய ராஜ கழுகுகளின் இனப் பெருக்கம் மற்றும் வளங்காப்பிற்கான உலகின் முதல் மையம் ஆகும்.
- ❖ இது 2007 ஆம் ஆண்டு முதல் இயற்கை பாதுகாப்பிற்கான IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ❖ இந்த மையமானது அந்தக் கழுகு இனங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## பீகார் மாநிலத்தின் 65 சதவிகித இட ஒதுக்கீடு




- ❖ கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் 50% ஆக வழங்கப்படும் இட ஒதுக்கீட்டினை 65% ஆக உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் பீகார் மாநில சட்ட மன்றம் நிறைவேற்றிய சட்டத் திருத்தங்களை பாட்னா உயர்நீதிமன்றம் ரத்து செய்து

உள்ளது.

- பீகார் அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (EBC), பட்டியலிடப் பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) இட ஒதுக்கீட்டை அதிகரித்தது.
- 10% பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான (EWS) ஒதுக்கீட்டுடன், இந்த மசோதா பீகாரில் இடஒதுக்கீட்டை 75% ஆக உயர்த்தியது என்ற நிலையில் இது உச்ச நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 50% உச்ச வரம்பைத் தாண்டியது.

### KGF தங்கச் சுரங்கத்தினைப் புனரமைத்தல்



- கோலார் தங்க வயல்களில் (KGF) 1,003.4 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள 13 சுரங்கக் கழிவுகளைப் புனரமைப்பதற்காக ஏலம் விடுதல் மற்றும் மீண்டும் தங்கச் சுரங்கப் பணிகளைத் தொடங்குவதற்கான மத்திய அரசின் முன்மொழிதலுக்கு கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- KGF பகுதியில் உள்ள 13 சுரங்கக் கழிவுகளில் 33 மில்லியன் டன் சுரங்கக் கழிவுகள் (பிரித்தெடுப்புக் கழிவுகள்) உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஒரு டன் கழிவினை செயல்முறைக்கு உட்படுத்தினால் ஒரு கிராம் தங்கம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- சுரங்கத் துறையின் கீழ் 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனமான பாரத் கோல்ட் மைன்ஸ் லிமிடெட், KGF பகுதியில் அமைந்த அதன் அலுவலகத்துடன் 2001 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சாத்தியமின்மை காரணமாக மூடப்பட்டது.

## முக்கிய தினங்கள்

### சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் - ஜூன் 27

- இந்தத் தினமானது இந்த நிறுவனங்களைக் கொண்டாடுவதோடு, அவற்றின் பெரும் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அவற்றின் பங்களிப்புகளை வெளிக் கொணர்ந்து, அவற்றின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிக்கிறது.
- முதல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் ஆனது 2017 ஆம்


ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் ஆனது உலகளவில் 90% வணிகங்கள், 60 முதல் 70% வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% பங்கினைக் கொண்டுள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகள்' என்பதாகும்.




## தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29

- ஜூன் 29 ஆம் தேதியானது பேராசிரியர் மஹாலனோபிஸ் அவர்களின் பிறந்தநாள் ஆகும்.
- அவர் வகைப்படுத்தல் மற்றும் தொகுப்புப் பகுப்பாய்வுத் துறையில் பயன்படுத்தப் படுகின்ற 'மஹாலனோபிஸ் தொலைவு' என்ற சூத்திரத்தை கண்டுபிடித்தார்.
- புள்ளியியல் மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் துறைகளில் பிரசந்த சந்திர மஹாலனோபிஸ் ஆற்றியப் பங்களிப்பை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- அவர் இந்தியாவின் முதல் திட்டக் குழுவில் ஓர் அங்கம் வகித்தார் மற்றும் 1931 ஆம் ஆண்டில் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை (ISI) நிறுவுவதில் மிக முக்கியப் பங்கு வகித்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★